விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 09 புதன்கிழமை (21.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 64

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்து

## புளியங்குளம் பகுதியில் நேற்று விமானத் தாக்குதல்

### இருவர் பலி; ஒருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான வவுனியா வடக்கு புளியங்குளம், பரிசங்குளத்தில் மிக் விமானங்கள் நடத்திய வான்குண்டு வீச்சுத் தாக்குதலில் இரு பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 7.45 மணியளவில் வன்னி வான்பரப்பில் வட்டமிட்ட இரு மிக் விமானங்கள் மக்கள் குடியிருப்புக்களை இலக்குவைத்து கண்மூடித்தனமான வான் குண்டு வீச்சுத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் மீதிருந்த கவனத்தை மங்கள சமரவீர குழு சிதறடித்துவிட்டது

### கோத்தபாய ராஜபக்ஷ குற்றச்சாட்டு

மங்கள சமரவீர குழுவினரின் பிரச்சினைகளால் விடுதலைப்புலிகள் மீது வைத்திருந்த கவனம் திசைதிருப்பப்பட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் வடக்கு கிழக்கில் நடைபெறும் விடுதலைப்புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாகவே தமக்கு அதிகமான தொலைபேசி அழைப்புக்கள் வந்ததாகவும் ,ஆனால் தற்போது மங்கள குழுவினரின் பிரச்சினைகள் பற்றியே அதிகமான தொலைபேசி அழைப்புக்கள் வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு புடையினரைப் போலவே மக்களுக்கும் விடு (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் அமைதி முயற்சிகள் குறித்து பசில் ராஜபக்ஷவுடன் யப்பான் அரசு பேச்சு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் மோதல்களுக்கு மத்தியில் ஜப்பானிய அரசு இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகரும் அவரது சகோதரருமான பசில் ராஜபக்ஷவுடன் பல சுற்றுப் பேச்சுக்களை டோக்கியோவில் கடந்த சில நாட்களாக நடத்தி வருவதாக தெரிய வருகிறது. ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் ரறோ அசோ,பசில் ராஜபக்ஷவை நேற்று முன்தினம் மாலை சந்தித்து தமது கருத்துக்களை பரிமாறிக்கொண்டதுடன் போர் நிறுத்த உடன்பாட்டின் எதிர்காலம் குறித்தும் விவாதித்தார்.

அதேபோலவே யப்பானின் பிரதி வெளிவிவகார அமைச்சரும் பசில் ராஜபக்ஷவை சந்தித்து அதே விவகாரங்கள் தொடர்பாக கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யப்பானின் அழைப்பை ஏற்று பசில் ராஜபக்ஷ அங்கு சென்றுள்ளதாகவும் இதே போலவே கடந்த (04 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் நேற்று ஒருவர் சுட்டுக்கொலை

(பருத்தித்துறை)

வடமராட்சியில் நேற்று ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்றுக் காலை 9.30 மணிக்கு இடம் பெற்ற இச் சம்பவத்தில் பருத்தித்துறைமுனைப் பகுதியைச் சேர்ந்த சாந்தப்பு ஜெனிபேர்ட் (வயது 27) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் தும் (04 ஆம் பக்கம் பார்க்க)

# உடன்படிக்கைகள் எதனையும் புலிகளுடன் அரசு செய்யவில்லை

### பாராளுமன்றில் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் எந்தவிதமான உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளவில்லை என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பாராளுமன்றில் தெரிவித்தார்.

கைச்சாத்திடப்படாத உடன்படிக்கையின் பிரதிகளையோ அதன் விபரங்களையோ எவ்வாறு வெளியிடுவதென்று கேள்வி எழுப்பிய அவர், அரசாங்கத்தின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்று கூறினார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## இணைத்தலைமை நாடுகளின் இலத்திரனியல் ஊடான மாநாடு

### இன்று மாலை நடக்கும்

(கொழும்பு)

ரோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமைத்துவத்தின் விசேட இலத்திரனியல் ஊடான மாநாடு இன்று பிற்பகல் இடம் பெற்றவுள்ளது.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளின் எதிர்காலம் மற்றும் போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பான விடயங்கள் குறித்து இதில் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா , நோர்வே, ஜப்பான்,ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் இன்று இடம் பெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்ள விருப்பதாக ஜப்பான் தூதரகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அமெரிக்கா உதவி இராஜாங்க செயலாளர் றிச்சட் பௌச்சர் இந்த மாநாட்டினை வழி நடத்தவுள்ளார்.

நோர்வே சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் எரிக்சொல் ஹெய்ம் மற்றும் விசேட பிரதிநிதி ஜோன் ஹான்சன் பௌவர், யப்பான் விசேட தூதுவர் யசூசி அகாசி ஆகியோருடன் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-3)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு நாளை ஐந்து வயது பூர்த்தி!

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு நாளை ஐந்து வயது பூர்த்தியாகின்றது. ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியிலிருந்தபோது 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி விடுதலைப்புலிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அதில் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் கையெழுத்திட்டனர். அன்றிலிருந்து யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுவதற்கும் கண்காணிப்பதற்கெனவும் ஸ்கண்டிநேவிய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜயலத் ஜயவர்த்தன எம்.பி. பொறுப்பாளராக நியமனம்

(கொழும்பு)

ஐ.தே.க.தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கடந்த வாரம் இடம் பெற்ற ஐக்கிய தேசியக்கட்சி செயற்குழுக் கூட்டத்தின்போது வவுனியா,மன்னார்,முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் அனைத்து வேலைத் திட்டங்களுக்கும் அதன் நடைமுறைகளுக்கும் பொறுப்பான தலைவராக கட்சியின் கம்பஹா மாவட்ட (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சூட்டுக்காயங்களுடன் மூன்று இளைஞர்களின் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளம் அம்மன் கோயில் பகுதியில் மூன்று இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இவ் விளைஞர்கள் மூன்று பேரினதும் சடலங்கள் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளன.

சடலங்களில் துப்பாக்கிச்சூடு மற்றும் வெட்டுக்காயங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. சடலங்கள் வவுனியா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

இவர்களின் சடலங்களுக்கு அருகில் தொலைபேசியில் மிரட்டல் விடுத்து கப்பம் பெற்றிருந்தவர் எனக் குறிப்பிட்டு தொலைபேசி இலக்கங்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பிரதேசத்தில் நேற்று இரு கிளைமோர்த் தாக்குதல்கள்

(கிளிநொச்சி)

வவுனியா கனகராயன்குளம் பெரியகுளத்தில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் வாகனமொன்று சிறு சேதத்துடன் தப்பியுள்ளது. இதில் வாகன ஓட்டுநர் காயமடைந்துள்ளார்.இத் தாக்குதல் நேற்றுக் காலை 8.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

முன்னதாக நெடுங்கேணி ஒட்டுசுட்டான் வீதி சமளங்குளத்தில் நேற்றுக் காலை 7 மணியளவில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர் கிளைமோர் தாக்குதலை நடத்தியுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிளிநொச்சி மருத்துவமனையில் கடுமையான வளப்பற்றாக்குறை

## சுகாதாரப் பணிப்பாளர் கவலை

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைகளில் கடுமையான வளப்பற்றாக்குறைகள் நிலவுவதாக கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொது மருத்துவமனையின் மருத்துவர்கள்,பணியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கிளிநொச்சி பொது மருத்துவமனை என்பது வன்னியில் உள்ள இரண்டரை இலட்சம் மக்களின் உயிர்நாடியாகவுள்ளது. இம் மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள், பணியாளர்களை பாராட்டி கௌரவிப்பது என்பது மிக்க மகிழ்ச்சியாகவுள்ளது.

எமது மாவட்ட மருத்துவமனையில் தற்போது மருத்துவ உபகரணங்கள், மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவி வருகிறது. தற்போது எழுந்திருக்கின்ற போர்ச் சூழல் இந்த நெருக்கடிகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

கடந்த காலங்களில் கூட நெருக்கடிகளை எதிர்கொண்டு மருத்துவர்களும் பணியாளர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி மக்களின் உயிர்களை காப்பாற்றியுள்ளனர். எதிர் காலத்திலும் மக்களின் உயிரைக் காப்பதில் மருத்துவர்களும் பணியாளர்களும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் உள்ளது என்றார் அவர். (எ-1)

# கண்டியில் தேடுதல் 30 தமிழர்கள் கைது

கண்டி மற்றும் தெல்தெனியா பகுதிகளில் படையினராலும் பொலிஸாராலும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது பெருமளவு தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் பெரும்பாலானோர் வடக்கு கிழக்கை மற்றும் கொழும்புப் பகுதியை சொந்த வதிவிடமாக கொண்டவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் வீதிகள் யாவற்றையும் தடுத்து வாகனங்கள் அனைத்திலும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தியபோதும் இவர்களை கைது செய்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. இதேவேளை முன்னர் கைது செய்யப்பட்ட 14 தமிழர்களும் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# இலங்கை வங்கியின் புதிய கருமபீடம்

இலங்கை வங்கியின் ஊர்காவற்துறைக் கிளையின் புதிய கருமபீடத்திறப்பு விழா இன்று காலை 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.தற்போது வேலணையில் இயங்கும் இலங்கை வங்கி ஊர்காவற்றுறைக் உதவி அரச அதிபர் பணிமனையில் திறந்து வைக்கப்பட வுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருண்மநாயகமும் , சிறப்பு விருந்தினர்களாக வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரட்ணம், ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் கனகராசா ஸ்ரீமோகன், ஊர்காவற்துறை பிரதேச செயலர் ஏ.கணேசானந்தராசா ,வேலணை பிரதேச செயலாளர் கை.மகேந்திரலிங்கம் , ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வண. பிதா.யோ.அ.யேசுதாஸ் அடிகளார் , ஊர்காவற்துறை சிவன் ஆலய செ.விமலராச குருக்கள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-3)

# பாகிஸ்தான் ஆயுத உதவி வழங்குமானால் அது தமிழ் மக்களுக்கு விரோதமாக அமையும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்திற்கு பாகிஸ்தான் அரசாங்கம் உதவியளிக்க இருக்கின்றமை தமிழ் மக்களுக்கு எதிரானதாகவும் இந்திய நலனை பாதிக்கக்கூடிய வகையிலும் அமையும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவத்திற்கு இந்தியா உதவி மறுத்துள்ளது. ஆனால் பாகிஸ்தான் அரசாங்கம் உதவி வழங்க முன்வந்திருந்திருக்கின்றமை சமாதான நடைமுறைகளுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பின் பாராளுமன்ற குழு பிரதித்தலைவரும் யாழ்.மாவட்ட எம்.பி.யுமான் மாவை சேனாதிராஜா இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

தமிழ் மக்களின் பிரச்சினை பயங்கரவாத பிரச்சினையல்ல. அதனை பயங்கரவாத பிரச்சினையாக் கருதி பாகிஸ்தான் அரசாங்கம் இலங்கை இராணுவத்திற்கு உதவி வழங்குவதாக இருந்தால் அது தமிழ் மக்களுக்கு விரோதமாக அமையும்.

சர்வதேச நாடுகள் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துவரும் இந்த வேளையில் பாகிஸ்தான் ஆயுத ரீதியாக இராணுவத்திற்கு உதவி செய்வது என்பது ஏற்புடையானதல்ல.

பயங்கரவாத பிரச்சினை பாகிஸ்தானிலே அதிகமாக இருக்கின்றது. பயங்கரவாதத்தை அழிப்பதற்காக அமெரிக்கா, பாகிஸ் தானுக்கு ஆயுதங்களை வழங்கி வருகின் றது.

இந்த நிலையில் பாகிஸ்தான், இலங்கை இராணுவத்திற்கு உதவியளிக்க முற்பட்டிருக்கின்றது. அவ்வாறு இராணுவத்திற்கு பாகிஸ்தான் உதவியளிக்குமாக இருந்தால் அது இராணுவச் சமநிலையை பாதிக்கும். பேச்சுவார்த்தை மேசையிலும் சமநிலையை அது குறைத்துவிடும் நிலை ஏற்படும் என்றார். (எ-1)

# கொடியேற்றம்

சுன்னாகம் அருள்மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் நாளை 22ஆம் திகதி காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதி மாலை 4.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் , மறுநாள் காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் நடைபெறுவதுடன் 3ஆம் திகதி தீர்த்த திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (ச-3)

# பதவி விலக்கப்பட்ட அமைச்சர்கள் விரைவில் அரசிடம் மண்டியிடுவர்

## நீதிமன்ற அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பதவி விலக்கப்பட்ட மங்கள சமரவீரவும் சிறிபதி சூரியராட்சியும் இன்னும் ஆறு மாத காலத்திற்குள் அரசாங்கத்திடம் மண்டியிடுவார்கள்.இதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. காரணம் அவர்களால் வாகனங்களும் அதிகாரங்களும் இன்றி செயற்பட முடியாது .

இன்று மனித உரிமை மீறல்கள் பற்றி பேசுகின்ற மங்கள சமரவீர வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது நாட்டில் மனித உரிமை மீறப்படவில்லை என்று பாராளுமன்றத்தில் கூட உரையாற்றியிருந்தார்.

இது பதவிக்காக செய்யும் இரட்டை அரசியலாகும். ஆனால் நான் அன்றும் இன்றும் யுத்தத்தை-மனித உரிமை மீறல்களை எதிர்ப் பவன் என நீதிமன்ற மற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் சுனாமி பொதுக்கட்டமைப்பு ஒன்றை புலிகளுடன் மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் ஜே. வி.பி. அப்போதைய அரசாங்கத்தை விட்டு விலகிவிடும் என்ற ஒரே காரணத்திற்காக அன்று மங்கள சமரவீர பொதுக்கட்டமைப்பை எதிர்த்தார்.

பொதுக்கட்டமைப்பு சாத்தியமாகி இருந்தால் இன்று பிரச்சினைக்கான தீர்வின் ஆரம்பக்கட்டத்திற்கு நாம் சென்றிருக்கலாம். காரணம் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவும் அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கும்.

ஜே.வி.பி. அரசாங்கத்தை ஆட்டிப்படைக்க வேண்டுமென்பதே மங்கள சமரவீரவின் நோக்கமாகும். ஆனால் அது சாத்தியமாகாது .ஜனாதிபதி அமைச்சர்களை பதவி விலக்கியமை சரியான நடவடிக்கை என்றே நாட்டு மக்கள் கருதுகின்றனர். இதேவேளை கடத்தல்கள் ,காணாமல் போதல்கள் என்பன நாட்டில் அதிகரித்துள்ளன. எனவே அவற்றைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

தற்போது மனித உரிமை மீறல் தொடர்பாக ஆராய சர்வதேச கண்காணிப்புக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ச-1)

# புலமைப்பரிசில்

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி உயர் வகுப்பு மாணவி செல்வி காயத்திரி ஸ்ரீகந்தவேல் சுவாமி விவேகானந்தர் கல்விப் புலமைப் பரிசிலைப் பெற்றுள்ளார்.

இப்புலமைப் பரிசு பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியூடாக வழங்கப்படுமென பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிர பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா அறிவித்துள்ளார். (ச-52)

# ஊரடங்கு வேளையில் நடமாடிய 11பேர் கைது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் நேற்று முன்தினம் மாலை ஊரடங்கு வேளையில் வீதியில் நடமாடினார்கள் என்ற குற்றத்திற்காக11 பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸார் குறித்த 11 பேரையும் நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன் றில் ஆஜர்படுத்தினார்.மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் அவர்களை பிணையில் விடுதலை செய்தார். (ச-5)

# மாணவ தாதிமார் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு (2006 II ) சுகாதார பாரமரிப்பு மற்றும் போசனை அமைச்சு விண்ணப்பம் கோரியுள்ளது.

விண்ணப்பதாரி 2005 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் மூன்று விஞ்ஞானப் பாடங்களில் தேர்ச்சி அடைந்திருப்பதுடன் க.பொ.த சாதாரண பரீட்சையில் தமிழ், கணிதம்,விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறுபாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன் எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். நேர்முகத் தேர்வின் மூலமே இப்பத விக்கு ஆட்சேர்ப்புச் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வலம்புரி காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (ச)

# முகாமைத்துவ உதவியாளர்களை தரமுயர்த்துவதற்கான பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களை வகுப்பு I இற்குத் தரமுயர்த்தும் பரீட்சைக்கான விண்ணப்பங்களை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு கோரியுள்ளது. இதன் முடிபுத் திகதி எதிர்வரும் 28ஆம் திகதியாகும்.

இதுதொடர்பான மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம் பிராந்திய ஆணையாளர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் என பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)

# பல்கலை. மாணவனின் கொலைக்கு ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

பல்கலைக்கழக நான்காம் வருட கலைப் பீடமாணவன் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு;

நான்காம் வருட மாணவன் கி.கமலதாஸ் சுட்டுக் கொல்லப்பட்டமை மிகுந்த மனவருத்தத்துக்குரிய விடயமாகும். யாழ்.பல்கலைக்கழகம் மாணவர்களது கல்விச் செயற்பாட்டை ஆரம்பிக்க இருந்தவேளை இத்தகைய சம்பவங்கள் மாணவர் மத்தியில் பீதியையும் மனவருத்தத்தையும் ஏற்படுத்தக் கூடிய தொன்றாகும்.

எனவே யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மேற்படி மாணவனுடைய கொலைக்கு ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றது. (எ)

# யாழ்.இந்துவில் இருந்து 97 பேர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக்கல்லூரியில் இருந்து இம்முறை 97 பேர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளதாக அதிபர் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் வெளியான வெட்டுப் புள்ளிகளின் அடிப்படையில் அவர்கள் தெரிவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார். (ச)


# பாதுகாப்பு ஊழியர்கள் தேவை

பாதுகாப்பு ஊழியர்களாக கடமையாற்றுவதற்கு ஆண், பெண் இருபாலரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுடையவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகஸ்தர்,
வலம்புரி,
இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

நியாயமற்ற பிரமாணங்கள் செய்வதும் தவறு. அதனைக் காப்பது அதனிலும் தவறு.

- அப்துற் - றஹீம்

வலம்புரி

# வீதியைக் கடப்பதிலும் காத்திருப்பு இதுவோ தமிழர் தலைவிதி!

யாழ்.குடாநாட்டின் பிரதான வீதிகளில் இப்போது நடமாடுவதிலும் காத்திருக்கும் பரிதாபம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக பலாலிவீதி, கண்டிவீதி, பருத்தித்துறை வீதிகளில் பயணிப்போர் இரண்டு,மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக காத்திருக்க வேண்டியுள்ளது.

இதனால் அவசர அலுவல்கள் எதனையும் மேற்கொள்ள முடியாமல் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இராணுவ வாகனங்களின் போக்குவரத்திற்காக பயணத்தடை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும் , இரண்டு , மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக வீதித்தடையை அமுல்படுத்துவது எவ்வகையிலும் நியாயமாகாது. இதுவிடயத்தில் படைத்தளபதிகள் கவனமெடுப்பது அவசியமாகும்.

வைத்தியசாலைகள் உள்ளிட்ட அவசர சேவைகளைப் பெறுவதற்காகச் செல்லும் மக்கள் பயணத்தை மேற்கொள்ள முடியாமல் போகின்றது. இதனால் உயிராபத்துக்கள் கூட ஏற்பட வாய்ப்புண்டு.

இதற்கு அப்பால் இரண்டு, மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக வீதித்தடையை அமுல்படுத்துவதானது தென்னிலங்கையில் சாத்தியமானதா? என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் ஏற்படவே செய்யும்.

சிங்கள மக்கள் மத்தியில் செய்ய முடியாத வீதித்தடையை யாழ்.குடாநாட்டில் சர்வசாதாரணமாக - தினசரி நடைமுறைப்படுத்தும் போது நாம் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படுகின்றோம் என்ற உணர்வு ஏற்படவே செய்யும் இதில் நியாயமும் உண்டு.

அதேநேரம் யாழ்.குடாநாட்டு மக்கள் இயந்திர வேகத்தில் செயற்படவேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். சங்கக் கடை , எரிபொருள் நிலையம் , வைத்தியசாலைகள்,பிரதேச செயலகங்கள், கிராம சேவை உத்தியோகத்தரின் அலுவலகங்கள் , சந்தைகள் என எங்குமே வரிசை - காத்திருப்பு.

இருபத்து நான்கு மணி நேரத்தில் அரைவாசி நேரத்தை ஊரடங்குச் சட்டம் விழுங்கிவிட மிகுதி நேரத்தில் எல்லா வேலைகளையும் செய்துவிட வேண்டிய நிர்ப்பந்தம். இதனிடையே ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதில் ஏற்படும் மாற்றங்கள் மக்களைக் குழப்பிவிடுகின்றன.

அதிலும் ஊரடங்குச் சட்டம் இன்று மாலை நான்கு மணிக்கு , ஐந்து மணிக்கு என தத்தம் வசதிக்காகக் கட்டவிழ்த்துவிடப்படும் வதந்திகள் என அனைத்தும் மக்களைக் குழப்பிவிட,ஒட்டு மொத்தத்தில் மனித வாழ்வே வெறுத்துப் போய் விடுகின்றது.

எனவே இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் யாழ்.குடாநாட்டில் மக்கள் படும் அவலங்களைக் குறைப்பதற்குக் கொஞ்சமேனும் படைத்தளபதிகள் முயற்சிக்க வேண்டும்.

மாலை ஆறுமணிக்கு ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தும் அதே நேரம் இரண்டு, மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக பயணத் தடையை விதிக்கும் போது அலுவலகங்கள், கல்விக் கூடங்கள் எதுவுமே செம்மையாக இயங்க முடியாது போகும்.

அத்துடன் இத்தகைய பயணத் தடைகளும், ஊரடங்கு நேர மாற்றங்களும் யுத்தம் ஆரம்பித்து விட்டதா? என்ற ஏக்கத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் இது சாதாரண மனித வாழ்விற்கு உகந்த தல்ல.

# யாழ்.,வந்தாறுமூலை பல்கலைக்கழகங்களுக்கு சிங்கள,முஸ்லிம் மாணவர்களை அனுமதிப்பதில்லை

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு பல்கலைக் கழகங்களை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக் கப்பட்டால் பல்கலைக்கழகங்களுக்கு வருடா வருடம் 20 ஆயிரம் மாணவர்களை இணைத்துக் கொள்ளலாம். அத்துடன் வடக்கு கிழக்கில் காணப்படுகின்ற நிலைமையை கருத்திற் கொண்டு யாழ்ப்பாணம், வந்தாறுமூலை ஆகிய இரு பல்கலைக்கழகங்களுக்கும் சிங்கள, முஸ்லிம் மாணவர்களை சேர்த்துக் கொள்வதில்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்று ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

2006/ 2007 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக் கழக வெட்டுப் புள்ளியை வெளியிட்டு வைத்ததன் பின்னர் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், மேலும் தெரிவித்ததாவது;

நாடளாவிய ரீதியில் உள்ள பல்கலைக்கழகங்களில் உட் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டால் மேலும் 20 ஆயிரம் பேரை பல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக் கொள்ளலாம்.

வடக்கு கிழக்கில் காணப்படுகின்ற நிலைமை காரணமாக சிங்கள மற்றும் முஸ்லிம் மாணவர்கள் அங்கு செல்வதற்கு அஞ்சுகின்றனர். இவ் இரு பல்கலைக்கழகங்களுக்கும் கடந்த வருடங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் இடை நடுவில் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாற்றப்பட்டனர்.

இந்த நிலை எதிர்காலத்தில் ஏற்பட்டு விடக்கூடாதென்பதற்காகவே அந்த இரு பல்கலைக்கழகங்களுக்கும் சிங்கள முஸ்லிம் மாணவர்களை சேர்த்துக் கொள்வதில்லை என்று பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே தீர்மானித்து விட்டது. (ச-5)

# முன்னாள் அமைச்சர்களுடன் பேச ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விருப்பம்

## நெருக்கமான வட்டாரங்கள் தகவல்

பதவி விலக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர , சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் தமது அறிக்கைகளை மீளப்பெற்றால் அவர்களுடன் பேசத் தயார் எனவும் மனித உரிமை மீறல் தொடர்பான தவறான அறிக்கைகள் நாட்டின் பாதுகாப்பை சீர்குலைத்துள்ளது எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராட்சி ஆகியோர் நாட்டின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கைகளை திருத்திக் கொண்டால் என்னைப் பற்றியும் எனது சகோதரர்களைப் பற்றியும் கூறியவற்றை மறந்துவிடுகிறேன்.

இலங்கையில் ஒவ்வொரு எட்டு மணிநேரத்திற்கும் ஒருவர் கடத்தப்படுவதாக மங்கள சமரவீரவும் படையினர் கிழக்கில் ஒரு போலியான போரை நடத்தி வருவதாக சிறிபதி சூரியாராட்சியும் தெரிவித்துள்ளனர். அவர்களுடன் இணைவதற்கான கதவுகள் இன்னமும் திறந்தே உள்ளது.

பதவி விலக்கப்பட்ட இரு அமைச்சர்களும் பாதுகாப்பு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கருத்துக்களை கூறி தமது அரசியல் விளையாட்டுக்களில் நாட்டின் நல்ல அபிப்பிராயத்திற்கு களங்கம் ஏற்படுத்தியுள்ளனர்.

இவர்கள் இருவரும் அமைச்சர்களாக இருக்கும் போது இந்த குற்றச்சாட்டுக்களை சுமத்தாது ஏன் பதவி விலக்கியதும் சுமத்தியுள்ளனர் என்பது தான் எனக்கு ஆச்சரியமாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

இதனிடையே அமைச்சர்களை பதவி விலக்குவதற்கு இரு நாட்களுக்கு முன்னர் நேரில் வந்து கலந்துரையாடி தமக்குள் இருக்கும் வேற்றுமைகளை தீர்த்துக் கொள்ள வருமாறு மகிந்த ராஜபக்ச ஐந்து தடவைகள் மங்கள சமரவீரவுக்கு தொலைபேசி மூலம் அழைப்புக்கள் விடுத்ததாகவும் ஆனால் மங்கள சமரவீர அதற்கு சம்மதிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-5)

# இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா கொள்கை ரீதியாக உதவவேண்டும்

## இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் உரை

இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் இந்தியா கொள்கை ரீதியாக ஈடுபாட்டை காட்ட வேண்டும் எனினும் தலையீட்டை மேற்கொள்ள கூடாது என இலங்கைக்கான இந்திய உயர் தானிகர் என்.என்.ஜா தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஏற்புடையது அல்ல என இந்திய, இலங்கை ஜனாதிபதிக்கு அறிவுரை வழங்க வேண்டும் என அவர் சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணங்களில் கருணா அணியினர் காரணமாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இராணுவ பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மிகவும் காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் முஸ்லிம் சிறுபான்மை இனத்தவர்களுடன் தகுந்த உறவுகளை கொண்டிருக்காவிட்டால் அவர்கள் அல் ஹைடாவின் தொடர்பை பெற முயற்சிக்கலாம் என அவர் மேலும் கூறினார்.

இலங்கை விடயத்தில் சீனாவும் பாகிஸ்தானும் செல்வாக்கு செலுத்துவதனால் அது தொடர்பில் இந்தியா முக்கிய பங்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ச-3)

# அரசை ஆட்டிப்படைத்த ஜே.வி.பியினால் இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தை ஜே.வி.பி.இதுவரை காலமும் ஆட்டிப் படைத்து வந்தது. ஆனால் இன்று அந்த நிலை மாறியுள்ளது. அரசாங்கத்தை ஜே.வி.பியினால் அசைக்க முடியாது. இத்தகைய நிலை அதிகாரப்பகிர்வின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு வாய்ப்பை அதிகரித்துள்ளது என்று நீதிமன்ற மற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் தீர்வு காண்பதற்கான சாத்தியம் அதிகரித்துள்ளது. விரைவில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் தீர்வுயோசனை ஒன்றை முன்வைப்பதற்கு அரசாங்கத்திற்கு சந்தர்ப்பும் கிடைத்துள்ளது.

ஐ.தே.கவில் இருந்து 18 எம்.பிக்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டமையினால் ஜே.வி.பியின் அரசாங்கத்தை கட்டுப்படுத்தும் கருவி செயலிழந்துள்ளது என்று அவர் கூறினார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் தீர்வு காண்பதே சாத்தியமான விடயமாகும்.

ஆனால் அந்த சாத்தியம் இதுவரை காலமும் அரசாங்கத்திற்கு இருக்கவில்லை. யுத்தத்தினால் ஒருபோதும் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அந்த வகையில் அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான சாத்தியம் தற்போது அதிகரித்துள்ளது.

இருப்பினும் அரசாங்கம் விரைவில் இனப்பிரச்சினை தீர்வுக்கான அரசியல் தீர்வொன்றை முன்வைப்பது அவசியமாகும். இதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் அதிகாரப்பகிர்வின் அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளதால் விரைவில் தீர்வுயோசனை முன்வைக்கப்படும் என்றார். (ச-5)

# அலுமினியக்கட்டிகளை வைத்திருந்த இருவர் கைது

(கொழும்பு)

இலங்கைக்கு கடத்துவதற்கென்று தயாரிக்கப்பட்டிருந்த இரண்டு தொன் அலுமினியக்கட்டிகளை இந்தியப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மதுரை மெத்தானியா புரத்திலுள்ள தொழிற்சாலை ஒன்றை இராமேஸ்வரம் பொலிஸார் நேற்று முன்தினமிரவு சோதனை செய்துள்ளனர்.

இச் சோதனையின் போது 70 மூடைகளில் இரண்டு தொன் அலுமினியக்கட்டிகளை பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

இப் பொருட்களுடன் சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர். குறிப்பிட்ட இருவரையும் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸார் இராமேஸ்வரத்திற்கு அழைத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-3)

**Sri Lanka Red Cross Society**

Jaffna Branch

We want Part Time Doctors to work at our mobile medical clinic. Please send the CV to reach us before 28th February 2007.

Branch Executive Officer,
SLRCS, 73, Kandy Rd,
Jaffna.

(C-A-628)

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 21 10 1998



ஆண்டவன் அடியில் 21 02 2006

**செல்வி முகுந்தன் சுதர்சியா (வவா)**

பாசமுடன் நாமிருக்க– பாவம்
அந்த இறைவனுக்கும் பிடிக்கவில்லை.
என் எதிர்காலம் பற்றிய எத்தனை கனவுகள்
நீ கண்டாய்.
என்னையும் உன்னையும் பிரிக்க
எப்படித்தான் அவனுக்கும் மனம் வந்ததோ?
சகோதரர் இல்லாப் பிள்ளை என்று தரணியில்
யாரும் சொல்ல...
தவிக்கிறதடி அக்கா என் உள்ளம்!
அநாதையாய் நானிருக்க அவனியில் நீ எங்கே?
நிஜமாக நீ இல்லையா! நினைக்க மனம் மறுக்கிறது.
எனக்கிருந்த சகோதரி நீ மட்டும் தானக்கா!
என்னை மறந்து போனாயோ!
அக்கா நீ எங்கே? எங்கே?

குடத்தனை கிழக்கு,
குடத்தனை.

நித்தம் உன் நினைவில் வாழும்
தம்பி ; சுலக்ஷன்,
அம்மா, அப்பா.

(Cஅ-627)

## மரண அறிவித்தல்

### திருமதி மகாலட்சுமி கார்த்திகேசு

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், வேலணை வடக்கு, இராசையா வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலட்சுமி கார்த்திகேசு 18.02.2007 இல் கொழும்பில் சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் அமரர் பாலசுந்தரம் மற்றும் மலர் மகள், நித்தியானந்தன், கனகமலர், தனலெட்சுமி, விக்கினேஸ்வரநாதன், பேரின்பதாசன், தியாகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

திருமகள், தம்பிராசா (T.M.B கொழும்பு), கானசரஸ்வதி, சிவலோகநாதன், நித்தியானந்தன், கௌரி, வதனா, சந்திரரஜனி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.02.2007 புதன்கிழமை கொழும்பில் நடைபெறும்.

உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

30/1 மேபிள் றோட்,
கொழும்பு–13

தகவல்
மருமகன்

T.P.0112 338237

(625)

## புரிந்துணர்வு...

நியமிக்கப்பட்டு செயற் பட்டுவந்தனர்.

ஒப்பந்தம் நடைமுறையிலிருந்தபோது ஆறு சுற்றுப் பேச்சுக்கள் இடம் பெற்று அவற்றின் மூலம் சில செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந் நிலையில் 2005 ஆம் ஆண்டு மார்கழி மாதம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் செயற்பாடு, நடைமுறை படுத்தல் என்பன சிக்கலடைந்துள்ளன.

பின்னர் அரசியலில் ஏற்பட்ட குழப்பங்கள் அவ் ஒப்பந்தத்தை மேலும் சீர்குலையச் செய்தது. அதேவேளை ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய என்பன புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக செயற்படத் தொடங்கி யுள்ளன.

இதனால் அதன் செயற்பாடுகள் குறித்து மக்கள் மத்தியில் பெரும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஆயுள் நீடிக்குமா? இன்று அல்லது நாளை முடிவுக்குக் கொண்டுவருமா? என மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை 24 மணித்தியாலங்களுக் குள் போர் நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்காவிட்டால் தாம் கடுமையான நடவடிக்கையில் ஈடுபடப்போவ தாக தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித் துள்ளது.

தேசத்துரோகப் பட்டியலுக்குள் இணை யாது இந்த உடன்படிக்கையை ரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு முன்னணியின் அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகமாநாட்டிலேயேஅவர் இதனைத் தெரிவித் துள்ளார். நாளையுடன் ஐந்து வருடங்கள் பூர்த்தியாகும் போர் நிறுத்த உடன்படிக்கை யை ரத்துச் செய்யுமாறு கோரி விகாரமா தேவி பூங்காவில் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தேசிய பிக்கு முன்னணி ஈடுபட்டுள்ளது.

இவ் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் ஜனா திபதி மகிந்தவின் முடிபு இன்று அல்லது நாளை வெளியாகலாம் என அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ச-3)

## உடன்படிக்கைகள்...

அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் இரகசிய உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்ட பின்னரே கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களை இராணுவம் மீட்டது. அதன் இரகசியங்களை வெளியிடுவோம் என பதவி விலக்கப்பட்ட அமைச்சர் சிறிபதி சூரியாராட்சி கூறிய கருத்துக்கு விளக்கமளிக்க வேண்டுமெனக் கோரி ஐ.தே.க.வின் சிரேஷ்ட எம்.பி. ஜோசப் மைக்கல் பெரேரா சபையில் விசேட உரை ஒன்றை நிகழ்த்தியிருந்தார். அதற்கு பதிலளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்கம் புலிகளுடன் இரகசியமான உடன்படிக்கைகள் எதனையும் செய்து கொள்ளவில்லை. அவ்வாறு அரசு உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டது என கூறுகின்ற முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராட்சியிடம், வேண்டுமானால் விபரங்களை பெற்றுக்கொள்ளுங்கள் அரசாங்கம் அந்த அமைச்சரின் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கின்றது என்றார்.

பாராளுமன்றம் சபாநாயகர் வி.ஜே.மு. லொக்குபண்டார தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கூடியதும் எம். பி.க்களுக்கான வாய்மூல கேள்வி நேரம் முடிபடைந்தது. அதன் பின்னர் சபாநாயகரின் அனுமதியுடன் விசேட உரை ஒன்றை ஆற்றிய ஜோசப் மைக்கல் பெரேரா பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் பதவி விலக்கப்பட்ட அமைச்சர் சிறிபதி சூரியாராட்சியின் மேற்படி குற்றச்சாட்டுக்கு சபையில் விளக்கமளிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஜோசப் மைக்கல் பெரேரா எம்.பி. தனது உரையில் மேலும் கூறியதாவது;

பதவி விலக்கப்பட்ட அமைச்சர் சிறிபதி சூரியாராட்சி கூறியது போன்று அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்குமிடையில் இரகசிய உடன்படிக்கை ஏதும் உள்ளதா? என்று அரசாங்கத்திடம் கேட்கின்றோம்.

இந்த விடயத்தை கேள்வியுற்ற நாங்கள் அதிர்ச்சி அடைந்தோம். உண்மையில் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் இரகசிய உடன்படிக்கை உள்ளதா? அப்படியானால் அதனை சபையில் வெளிப்படுத்துங்கள்.

இந்த உடன்படிக்கை எப்போது செய்யப்பட்டது? இதில் யார் கைச்சாத்திட்டது? இதன் நிபந்தனைகளும் விதிகளும் என்ன? இவற்றுக்கும் பதிலைக் கேட்கின்றோம்.

உடன்படிக்கையொன்று இரு தரப்புக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டிருந்தால் அதனை ஏன் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரவில்லை? அந்த உடன்படிக்கை ஏன் மறைக்கப்பட்டுள்ளது?

உடன்படிக்கை தொடர்பான சகல விபரங்களையும் அதன் பிரதியையும் சபையில் வெளிப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

பாதுகாப்பு விவகாரம் தொடர்பான அனைத்து விடயங்களும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும்.

எனவே அரசாங்கம் புலிகளுடன் உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்தால் அதனை உடனடியாக சபைக்கு சமர்ப்பிக்குமாறு கோருகின்றோம் என அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார். (ச-5)

## வன்னிப்...

வாகனமொன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் வாகனம் சேதமின்றி தப்பியுள்ளது. கிராம சேவையாளர் குடும்பமொன்று பயணம் செய்திருந்த வாகனமே தாக்குதலில் இருந்து தப்பியுள்ளது.

தாக்குதல்கள் இடம் பெற்ற இடங்களில் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருவதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் ஓகஸ்ட் 8 ஆம் திகதி அம்பு லன்ஸ் வாகனத்தை இலக்கு வைத்து மேற் கொண்ட தாக்குதலில் வைத்தியர் உட்பட ஐவர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## வவுனியாவில்...

சிலவற்றுடன் அட்டை ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில் தவசிக்குளம் பகுதியில் இதேபோன்று கொல்லப்பட்டவர்கள் அருகில் இப்படியான அட்டை காணப்பட் தாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## ஜயலத்...

எம்.பியும், கட்சி உதவிச் செயலாளருமான டாக்டர் ஜெயலத் ஜெவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கிணங்க எதிர்காலங்களில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி,முல்லைத் தீவு மாவட்டங்களின ஒருங்கிணைப்பு நட வடிக்கைள், அது தொடர்பான பொறுப்புக்கள் அனைத்தும் டாக்டர் ஜெயலத்தின் தலைமையிலேயே இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வடமராட்சியில்...

பளை வீதி கோல்டன் பிளேஸ் பகுதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள் ளார். இவரது மரணம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிவான் பிரேதபரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-52)

## இலங்கையின்...

ஆண்டின் முற்பகுதியில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலைமைகள், கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் நடவடிக்கைகள், கருணா குழு விவகாரம், பொது மக்களுக்கு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்புப் பிரச்சினைகள் தொடர்பாக தமது கருத்துக்களை ஓர் உயர் இலங்கை அரச அதிகாரியுடன் பகிர்ந்துகொள்ள யப்பான் விரும்பியதாகவும் எனவே பசில் ராஜபக்ஷ அழைக்கப்பட்டதாகவும் யப்பானிய அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யப்பான் இலங்கைக்கு பிரதான நன்கொடையாளர் நாடுகளில் ஒன்றாகும் என்பதுடன் பல யப்பானிய அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் கிழக்கில் பணியாற்றுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று இணைத்தலைமை நாடுகளின் தொலைத் தொடர்பு மாநாடு நடைபெறவுள்ளதாகவும் அதணையடுத்து யப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி, பசில் ராஜபக்ஷவை சந்தித்து எதிர்வரும் வியாழக்கிழமை ஐந்து வருடங்களை புர்த்திசெய்யும் போர் நிறுத்தத்தின் எதிர்காலம் தொடர்பாக கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் அமைதிப்பேச்சுக்களின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராயவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-1)

## விடுதலைப்புலிகள்...

தலைப்புலிகள் தொடர்பாக வைத்திருந்த அவதானத்தை மங்கள சமர வீர குழுவினர் வேறு பக்கம் திரும்பிவிட்டார் கள் என அவர் தெரிவித்ததாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது. (எ-1)

## புளியங்குளம்...

தாக்குதலை நடத்தியுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பரசங்குளத்தில் வான்குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்திய அதே மிக் விமானங்கள் சிறிது நேரத்தில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மணவாளப்பட்ட முறிப்பிலும் தாக்குதலை நடத்தியுள்ளனர். இதில் இரு பாடசாலை மாணவர்கள் காயமடைந்துள்ளனர். (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.